செய்தி வெளியீடு எண்: 622 நாள்:28.08.2020

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி .கே.பழனிசாமி அவர்கள் இன்று திருவாரூரிலிருந்து கார் மூலமாக தஞ்சாவூர் மாவட்டத்திற்கு சென்றுகொண்டிருந்தார். திருவாரூர் மாவட்டம், கோவில்வென்னி ஆதனூர் கிராமம் என்ற இடத்தில் வயல்காட்டில் 15 பெண்கள் களை பரித்துக்கொண்டிருந்ததை அறிந்த முதலமைச்சர் அவர்கள் திடீரென காரை நிறுத்தி பெண்கள் களை எடுத்துக்கொண்டிருந்த வயல்காட்டிற்கு சென்று அப்பெண்களிடம் உரையாடினார். வயல்காட்டில் களை எடுத்தப் பெண்கள் முகக்கவசம் இல்லாமல் இருந்ததை அறிந்த முதலமைச்சர் அவர்கள் தனது வாகனத்தில் வைத்திருந்த முகக்கவசத்தை அனைவருக்கும் வழங்கினார். அப்போது, அரசு மூலமாக அறிவிக்கப்பட்ட அனைத்து நிவாரண உதவிகளும் தங்களுக்கு கிடைத்துள்ளதா என்றும், கடந்த ஐந்து மாதங்களாக விலையில்லாமல் அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை போன்ற பொருட்கள் வழங்கப்பட்டது கிடைக்கப்பெற்றதா என்றும் கேட்டறிந்தார். வயல்காட்டில் பணிபுரியும் உங்களுக்கு நியாயமான கூலி கிடைக்கிறதா என்றும் அனைத்து நாட்களும் நீங்கள் விவசாய பணிக்கு செல்கிறீர்களா என்றும் கேட்டறிந்தார்.

எங்களை போன்ற கூலி தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் மற்றும் விலையில்லாமல் அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை போன்ற பொருட்களை வழங்கியதற்கு நாங்கள் உங்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களை போன்ற ஏழை கூலித் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கியதை போன்று தாங்களும் எங்களை போன்ற ஏழைகள் மீது அக்கறைக்கொண்டு பல்வேறு உதவிகளை செய்து வருவதற்கு நன்றியை தெரிவித்துக்கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9